# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 24 புதன்கிழமை 07.05.2025 கதிர் 189



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தமிழ்த் தேசியத்தின் இருப்பை உறுதி செய்துள்ள தேர்தல்!

## பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க சக தமிழ்க் கட்சிகளின் ஆதரவு கிடைக்கும் என்று சுமந்திரன் நம்பிக்கை





யாழ்ப்பாணம், மே 07

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் அநுர அலை என்று கூறப்பட்ட பொய்ப் பரப்புரைக்கு முடிவு கட்டி தமிழ்த் தேசியத்தின் இருப்பை உறுதி செய்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். 7


## நீதிமன்றில் சரணடைந்த பிரசன்னவுக்கு மறியல்!



கொழும்பு, மே 07

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று 7

## புதுக்குடியிருப்பில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப மரணம்



புதுக்குடியிருப்பு, மே 07

வயலில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தற்போது சீரற்ற 7

## எதிர்க்கட்சிகளைத் திரும்பிப் பார்க்கமாட்டோம்

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, மே 07

எதிர்க்கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி கைகோர்த்து சபைகளை நிறுவப்போவதில்லை என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளருமான ரில்வின் சில்வா இன்று புதன்கிழமை ஊடக சந்திப்பில் தெரிவித்தார். 7

## கெஹலிய மீண்டும் கைது!



கொழும்பு, மே 07

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்து தல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் 7

## மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து ஓரணியில் திரள்வோம்

### எதிர்க்கட்சிகளுக்கு சஜித் அழைப்பு



கொழும்பு, மே 07

மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் அந்த ஆணைக்கு மதிப்பளித்து எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதற்குரிய தலைமைத்துவத்தை வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் இன்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பிலேயே மேற்படி விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

“ஜனாதிபதி மற்றும் பொதுத் 7

# குமார் சங்கக்காரவின் பெயரில் இடம்பெறும் மோசடி அவசர எச்சரிக்கை

கொழும்பு, மே .7

முன்னணி வணிக பண்டக்குறி நிறுவனங்களை விளம்பரம் செய்வது போன்ற போலி காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக இலங்கையின் நட்சத்திர கிரிக்கட் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தாம் டராஸ் மற்றும் சம்சுங் னுயுசுயுணு, ளுயஅளரபெ போன்ற நிறுவனங்ளை ஆதரிப்பது போல் காட்டும் காணொளிகள், செயற்கை நுண்ணறிவு யுஜ தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டவை என்றும், இது பொதுமக்களை ஏமாற்றும் முயற்சியெனவும் சங்கக்காரா தெரிவித்துள்ளார்.

தாம்டராஸ்மற்றும்சம்சுங்னுயுசுயுணு்ஃளுயஅளரபெ போன்ற எந்த நிறுவனத்துடனும் இணைந்திருக்கவில்லை.

என்னைப் போல காட்டப்படும் அனைத்து விளம்பரங்களும் யுஜ தொழில்நுட்பத்தின் டீப் பேக் (னுநநி குயமந) அடிப்படையில் உருவாக்கப்பட்ட போலிகள். தயவுசெய்து அவற்றை நம்ப வேண்டாம்," என அவர் தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோசடி முயற்சிகள், யுஜ தொழில்நுட்பத்தில் உருவாகும் னநநிகயமந வீடியோக்கள் மற்றும் படங்களை பயன்படுத்தி பிரபலங்களை போல காட்டி விளம்பரங்கள் அல்லது முதலீட்டு திட்டங்களை பொய்யாகப் பரப்புகின்றன.

இதன்மூலம் பொதுமக்களின் நம்பிக்கையை மோசடிக்குப்பயன்படுத்து சமூக ஊடகங்களில்பரவுகின்றன. பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று இணைய பாதுகாப்பு நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். அதற்கான சில முக்கிய ஆலோசனைகள்:

விளம்பரங்கள் உண்மையானதா என்பதை அதிகாரப்பூர்வமான ப்ராண்ட் பக்கங்கள் அல்லது உறுதியான சமூக ஊடக கணக்குகள் மூலம் சரிபாருங்கள்.

மிகவும் ஈர்க்கக்கூடிய அல்லது நம்பமுடியாத அளவிற்கு நல்ல சலுகைகள் என்றால் அதைப் பற்றிக் கவனமாக இருங்கள், குறிப்பாக பணம் தொடர்பான விவரங்கள் தேவைப்படும்போது.

சந்தேகத்துக்கிடமான விளம்பரங்கள் அல்லது உள்ளடக்கங்களை உடனடியாக அதற்கான சமூக ஊடக நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்யவும்

அரசியலியர்களோ, பிரபலங்களோ சார்ந்த போல் தோன்றும் எந்தவொரு விளம்பரத்தையும் நம்புவதற்கு முன் நன்கு சிந்திக்க வேண்டும் என அதிகாரிகள் கேட்டுக்கொள்கின்றனர்.

இந்தக் குற்றச் செயலில் னுயுசுயுணு நிறுவனம் தொடர்பில்லையென்றும், அந்த விளம்பரங்களில் அவர்கள் பங்கு இல்லையென்றும் அந்த நிறுவனம் தங்கள் தரப்பில் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் உருவப்படமும் இதே போன்றதொரு விளம்பரத்தில் போலியாக பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 15 இலங்கையர்கள் மீட்பு!

கொழும்பு, மே .7

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கையர்கள் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி தற்போது மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் உள்ள அனைத்து இலங்கையர்களும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளி ஒருவரின் வாக்கை தவறாக பதிவிட்ட தேர்தல் அலுவலர்!

கொழும்பு, மே .7

மாற்றுத்திறனாளி ஒருவர் தனது வாக்கை தொலைபேசி சின்னத்துக்கு புள்ளடியிடுமாறு கோரிய நிலையில், தேர்தல் அலுவலர் வேண்டுமென்றே திசைகாட்டிக்கு புள்ளடியிட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

அநுராதபுரம், கஹடகஸ்திகிலிய முஸ்லிம் வாக்குச் சாவடியிலேயே இந்த முறைகேடு நடைபெற்றுள்ளது.

அங்கு வாக்களிக்க வந்த ஒரு மாற்றுத்திறனாளி, தனக்கு சுயமாக வாக்களிக்க முடியாத நிலையில் உதவியாளர் ஒருவரின் துணையை பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். அதன்போது வாக்குச் சாவடியில் கடமையில் இருந்த அலுவலர் ஒருவர் குறித்த மாற்றுத்திறனாளிக்கு ஒத்தாசை செய்ய முன்வந்துள்ளார்.

எனினும் வாக்காளர் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்துக்கு புள்ளடியிடச் சொன்ன போது அதற்குப் பதிலாக தேர்தல் அலுவலர் தேசிய மக்கள் சக்தியின் திசைகாட்டிக்கு புள்ளடியிட்டுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட வாக்காளரின் முறைப்பாட்டின் பேரில் அவருக்கு புதிய வாக்குச் சீட்டு வழங்கப்பட்டு, அவர் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்துள்ளார். (ஐ)



## கொழும்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் பலத்த போட்டி!

நடைபெற்று முடிந்த 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் பலத்த போட்டி நிலவுகிறது.

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களை பெற்றுள்ளது.

போட்டியிட்ட கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்கு விபரங்கள் பின்வருமாறு,

தேசிய மக்கள் சக்தி (NPP) - 81,814 வாக்குகள் - 48 உறுப்பினர்கள்

ஐக்கிய மக்கள் சக்தி (SJB) - 58,375 வாக்குகள் - 29 உறுப்பினர்கள்

ஐக்கிய தேசிய கட்சி (UNP) - 26,297 வாக்குகள் - 13 உறுப்பினர்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) – 9,341 வாக்குகள் – 5 உறுப்பினர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - (SLMC) - 8,630 வாக்குகள் - 4 உறுப்பினர்.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் பலத்த போட்டி நிலவுகிறது.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியைவிட, எதிர்க்கட்சிகளுக்கு அதிகமான ஆசனங்கள் உள்ளன.

17 உறுப்பினர்களை கொண்ட கொழும்பு மாநகர சபையில் 48 உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் அனைத்தும் பெரும்பான்மைக்கு தேவையான 69 உறுப்பினர்களைப் பெற்றுள்ளன.

எவ்வாறாயினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 29 உறுப்பினர்களை வென்றுள்ளதோடு, ஆட்சியமைப்பதற்காக ஏனைய கட்சிகளின் உதவியை நாட வேண்டியுள்ளது.

அதேபோன்று 48 உறுப்பினர்களை கொண்டுள்ள தேசிய மக்கள் சக்திக்கும் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை கைப்பற்ற ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது.

எனவே, தற்போது பெரிதும் பேசும் பொருளாகியுள்ள கொழும்பு மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றப்போகும் கூட்டணி எதுவென்பதை காலமே தீர்மானிக்கும்.

## நீதிமன்றத்தில் சரணடைந்த பிரசன்ன ரணவீர!



தலைமறைவாக இருந்த முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர மஹர மாஜிஸ்திரேட் இன்று (07) நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

கிரிபத்கொட பகுதியில் உள்ள அரச காணி ஒன்றுக்கு போலியான ஒரு உறுதிப்பத்திரம் செய்து அதனை விற்பனை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

நீதிமன்றத்தில் தொடரும் வழக்கில் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர ஆஜராகமையால் அவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இன்று அவர் தனது சட்டத்தரணிகளுடன் நீதிமன்றில் முன்னிலையாகியுள்ளார்.

## பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு எதிரான ரிட் மனு தள்ளுபடி!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்து கொள்ளாமல் இன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு தகுதி அற்றவர் என தீர்மானித்து, அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி, குறித்த மனுவை இலங்கை பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேரா தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகிலுள்ள பணக்காரர்கள் தங்குவதற்கு போட்டிப்போடும் நாடு



உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் இந்தியர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் வணிகம், வேலை வாய்ப்பு, திருமணம் உள்ளிட்ட காரணங்களால் மக்கள் இந்தியாவை விட்ட வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இப்படி இருக்கும் பொழுது புதிய பழக்கம் ஒன்று உருவாகியுள்ளது.

அதாவது இந்தியாவில் பணம் சம்பாரித்துக் கொண்டு வெளிநாடுகளில் செட்டலாகி விடுகிறார்கள். அதிலும் குறிப்பாக இந்தியர்களின் விருப்பமான நாடுகளில், தெற்கு ஐரோப்பிய நாடான மால்டா முக்கிய இடமாக மாறி வருகிறது.

சில பாலிவுட் பிரபலங்கள் உட்பட இந்திய பணக்காரர்கள், மால்டாவை ஐரோப்பிய குடியுரிமைக்கான பிரதான நுழைவாயிலாக பார்க்கிறார்கள்.

ஊடக அறிக்கைகளின்படி, பல பாலிவுட் நட்சத்திரங்கள் தொழில்முறை வளர்ச்சி மற்றும் வரி சலுகைகளுக்காக மால்டிஸ் குடியுரிமையை வாங்கிக் கொள்கிறார்கள்.

மால்டாவில் பிரம்மிப்பூட்டும் நிலப்பரப்புகள் மற்றும் சுற்றுலா இடங்கள் உள்ளன. இது இந்தியர்களுக்கு பிடித்திருப்பதால் அங்கு குடியுரிமை வாங்கிச் செட்டிலாகுகிறார்கள்.

அந்த வகையில், அதிகமாக பணம் வைத்திருப்பவர்கள் மால்டாவுக்கு குடிபெயர என்ன காரணம்? என பதனை பதிவில் பார்க்கலாம்.

மால்டா முதலீடுகளின் மூலம் குடியுரிமை திட்டத்தை வழங்குவதால் பணக்காரர்கள் அங்கு சென்று செட்டிலாக ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த திட்டம் அதிகாரப்பூர்வமாக Maltese Exceptional Investor Naturalization (MEIN) அறிவிக்கப்பட்டுள்ளது.



தனிநபர்கள் ஐரோப்பிய ஒன்றிய (EU) குடியுரிமையைப் பெறுவதற்கான சட்டப்பூர்வ பாதையாக இருப்பதால் பிரபலங்கள் உட்பட பலர் அவர்களிடம் உள்ள சொத்துக்களை மால்டாவின் பொருளாதாரத்திற்கு உதவியாக கொடுக்கிறார்கள்.

**நன்மைகள்**

1. மால்டா குடியுரிமையைப் பெறும் நபர்கள் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் (நுரு) எங்கு வேண்டும் என்றாலும் வாழலாம். அதே சமயம், வேலை மற்றும் படிப்பு விரைவில் கிடைக்கும். 12 முதல் 36 மாதங்களுக்குள் குடியுரிமை வழங்கப்படலாம்.

அத்துடன் மால்டா முதலீட்டாளர்கள் நாட்டில் நிரந்தரமாக வாழ வேண்டிய அவசியம் இருக்காது.

2. மால்டா நாட்டின் பாஸ்போர்ட்டின் வலிமைமிக்கது. அமெரிக்கா, கனடா மற்றும் யுனைடெட் கிங்டம் போன்ற சக்திவாய்ந்த நாடுகள் உட்பட 180 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விசா இல்லாத பயணம் செய்யலாம். வணிக வாய்ப்புகளுக்கு இது உதவியாக இருக்கும்.

3. முதலீட்டு மூலம் குடியுரிமை திட்டத்தின் கீழ், மால்டாவின் விண்ணப்பதாரர்கள் அரசாங்க பங்களிப்பை கூட வழங்கலாம். ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்து லாபத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

4. பாலிவுட் பிரபலங்கள் மற்றும் அதிக சொத்து மதிப்புள்ள நபர்களை ஈர்க்கும் வாலெட்டா, ஸ்லீமா மற்றும் செயிண்ட் ஜூலியன்ஸ் போன்ற பிரபலமான இடங்களில் ஆடம்பர சொத்துக்கள் கிடைக்கும்.

5. மால்டாவின் வளர்ந்து வரும் சுற்றுலாத் துறை மற்றும் வேகமாக வளர்ந்து வரும் சுற்றுச்சூழல் அமைப்பு வணிக முதலீடுகளுக்கு சிறந்த இடமாக பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இருக்கும் பல முதலீட்டாளர்கள் ஐரோப்பிய குடியுரிமை பெறுவதுடன் அவர்களின் செல்வத்தையும் அதிகரித்து கொள்கிறார்கள்.

# விமர்சிப்பதில் உள்ள ஆர்வத்தை பாராட்டுவதிலும் காட்டுங்கள்: பத்திரிகையாளர்களுக்கு முதல்வர் அன்பான வேண்டுகோள்





சில ஊடகங்கள் விமர்சிப்பதில் காட்டும் ஆர்வத்தை, நல்ல திட்டங்களை பாராட்டுவதில் காண்பிப்பதில்லை. பாராட்டுவதில் மட்டும் மென்மையான போக்கை கடைப்பிடிக்கின்றன'' என, முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க., அரசு பொறுப்பேற்று, நான்கு ஆண்டுகள் நிறைவடைந்ததை தொடர்ந்து, சென்னை கலைவாணர் அரங்கில், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்துறையினரை, முதல்வர் ஸ்டாலின் நேற்று சந்தித்தார்.

அப்போது, அவர் பேசியதாவது:

கடந்த 2021ல், ஆறாவது முறையாக தி.மு.க., ஆட்சி அமைந்தது மே 7ம் தேதி முதல்வராக பொறுப்பேற்றேன். தி.மு.க., அரசு ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

தேர்தல் அறிக்கையில் கூறியதில், பெரும்பாலான வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். அதில், சொல்லாத பல திட்டங்களையும், தொலை நோக்குப் பார்வையோடு, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும், புதிய திட்டங்களை அறிவிக்கிறோம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் சாதனை திட்டத்தின் துவக்க நாளாக இருந்து கொண்டிருக்கிறது.

எந்த மாதிரியான சூழலில், ஆட்சி பொறுப்பை ஏற்றோம் என்பது, எல்லோரையும் விட பத்திரிகையாளர்களுக்கு நன்றாகவே தெரியும்.

முந்தைய ஆட்சியாளர்களால் சீரழிந்த, பத்தாண்டு கால நிர்வாகம் ஒரு பக்கம் மதவாதம் உள்ளிட்ட பிற்போக்குத்தனங்களுக்கு இடமளித்து, இந்திய நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை ஒரு பக்கம் தமிழகத்துக்கு எந்தவித ஒத்துழைப்பையும் தர மறுக்கும், மத்திய அரசு இன்னொரு பக்கம் இதையெல்லாம் சமாளித்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் தான், எனக்குள் இருந்தது.

சரியான இலக்கை நிர்ணயித்து, அதை நோக்கி உறுதியாக பயணித்து, நிச்சயம் சாதிக்க முடியும் என்பதற்கு, இந்த நான்காண்டு கால அரசே சாட்சியாக அமைந்திருக்கிறது. அரசுகளை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒன்று கொள்கை அரசு இன்னொன்று சேவை அரசு. தி.மு.க., அரசை பொறுத்தவரை, கொள்கை - சேவை என இரண்டிலும், சிறந்து விளங்கி கொண்டிருக்கிறது. நான்காண்டுகளில் எப்படிப்பட்ட நெருக்கடிகள் வந்தன. எவ்வளவு அவதூறுகள் பரப்பப்பட்டன என்பது, பத்திரிகையாளர்களுக்கு நன்றாக தெரியும்.

இருந்தாலும், எந்த இடத்திலும், நாங்கள் கொள்கையில் தடம் மாறவில்லை. எந்த சூழ்நிலையிலும், மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் சோர்ந்து போகவில்லை. அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததில், பத்திரிகையாளர்களின் பங்கு மிக அதிகம். (ஐ)

# உங்களை நீங்களே தற்காத்து கொள்ளுங்கள் பொதுமக்களுக்கு பழனிசாமி அறிவுரை



தி டிக்டேட்டர் என்ற ஆங்கில படத்தின் ஹீரோவுக்கும், முதல்வர் ஸ்டாலினுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி விமர்சித்துள்ளார்.

தி.மு.க., ஆட்சியில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும், தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அருகே பா.ஜ., பெண் நிர்வாகி சரண்யா தலை துண்டிக்கப்பட்டு கொடூர கொலை திருப்பத்துார், கூத்தாண்டகுப்பம் அருகே கிணற்றில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் மூதாட்டி சடலம் கண்டுபிடிப்பு சென்னை, வண்டலுார் கல்லுாரி வளாகத்தில், ஆம்புலன்ஸ் டிரைவர் கொலை கரூர் மாவட்டம், குளித்தலையில், 12ம் வகுப்பு மாணவன் கொலை, புதுக்கோட்டை மாவட்டம், வடகாட்டில் ஜாதி மோதலில் வீடுகளுக்கு தீ வைப்பு என, கொடூர சம்பவங்கள் நடந்துள்ளன. முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க., அரசு பொறுப்பேற்று, நான்கு ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஆட்சியில் சராசரி நாள் எப்படி இருக்கிறது என்பதற்கு, நேற்றைய ஒரு நாளின் செய்திகளே சாட்சி. ஒவ்வொரு நாளும் இப்படி கொலைகளுக்கும், கலவரங்களுக்கும், சமூக அவலங்களுக்கும் இடையில் தான் நாம் வாழ்கிறோம்.

ஆனால், இது எதை பற்றியும் துளியும் அக்கறை இல்லாதவராய், நாலாண்டு கழிந்து விட்டது என, நாளைக்கு ஒரு 'வீடியோ ஷூட்' எடுத்துக் கொண்டு வருவார் முதல்வர்.

'என் ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு பிரச்னைகள் நடக்கவில்லை' என்று சட்டசபையில் சொன்னவர், இதையெல்லாம் சட்டம்- - ஒழுங்கு பிரச்னைகளாகக் கருதவே இல்லை என்றே தோன்றுகிறது.

'ஆக, குற்றவாளிகள் கைது' என்று சொல்வீர்களே, அதையாவது செய்து சட்ட நடவடிக்கை எடுங்கள் என்று முதல்வரை வலியுறுத்துகிறேன். தமிழக மக்களே, இனியும் இந்த தி.மு.க., அரசை நம்பி எந்தப் பயனும் இல்லை இன்னும் ஓராண்டு உங்களை நீங்களே தற்காத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)



# மழையில் குடை பிடித்து பூக்களை ரசித்த சுற்றுலா பயணிகள்

கொடைக்கானலில் நேற்று மதியம் சாரல் மழை பெய்த நிலையில் குடை பிடித்து பிரையன்ட் பூங்காவில் மலர்களை பயணிகள் ரசித்தனர்.

தொட்டபெட்டா சிகரத்துக்கு வந்த காட்டு யானையால் பரபரப்பு வெளியேற்றப்பட்ட சுற்றுலா பயணிகள்

தரைப்பகுதியில் வெளுத்து வாங்கும் கோடை வெயிலை சமாளிக்க குளு குளு நகரான கொடைக்கானலுக்கு நாள்தோறும் ஏராளமான பயணிகள் வருகின்றனர். நேற்று காலை நகரில் சுட்டெரிக்கும் வெயில் நீடித்த நிலையில் மதியத்திற்கு பின் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் 3:00 மணிக்கு பின் மாலை வரை சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது.

பிரையன்ட் பூங்காவில் பூத்துக் குலுங்கும் மலர்களை குடை பிடித்து பயணிகள் ரசித்தனர். நகரில் ஆங்காங்கே தரை இறங்கிய மேகக்கூட்டம் என ரம்யமான சீதோஷ்ண நிலையை பயணிகள் ரசித்தனர். மாலை நகரை பனிமூட்டம் சூழ்ந்து வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டு சென்றன. (ஐ)

# போதையால் கொலைகள் உச்சம்



தி.மு.க., ஆட்சியில் கொலை, கொள்ளை அதிகரித்து விட்டது. பட்டுக்கோட்டையில் பா.ஜ., முன்னாள் நிர்வாகி தலை துண்டித்து, கொலை செய்யப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது. அதேபோல், சிவகிரியில் வயோதிகர்கள் இருவரை, கொள்ளையர்கள் கைகளை வெட்டியும், காதுகளை அறுத்தும் கொடூரமாக கொலை செய்த சம்பவம், பேரதிர்ச்சி அளிக்கிறது.

கொங்கு பகுதியில், பெரும்பாலும் தோப்புகளில்தான் வீடு கட்டி மக்கள் வசிக்கின்றனர். ஆண்டாண்டு காலமாக எவ்வித பயமுமின்றி வசிப்பவர்கள், தி.மு.க., ஆட்சிக்கு வந்தபின், தோட்டங்களையும், தோப்புகளையும் காலிசெய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சிவகிரி சம்பவம், மக்களிடம் மிகவும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்லடத்தில் மட்டும் சமீபத்தில், ஏழு கொலைகள் நடந்துள்ளன.


இரு சம்பவங்களிலும், வீட்டில் உள்ள நாயை ஒரு வாரத்துக்கு முன்பே விஷம் வைத்துக் கொன்றிருக்கின்றனர். இப்படித்தான், கொலையாளிகள் திட்டம் போட்டு செய்துள்ளனர். இதையெல்லாம் கண்டுபிடித்து, கொலை சம்பவங்கள் நடக்காமல் செய்ய வேண்டிய பொறுப்பில் இருந்து காவல் துறை தவறிவிட்டது.

கொலையாளிகளை கண்டுபிடிக்க, மாநில அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)



# சுய மதிப்பீடு செய்வோம்!



சுய மதிப்பீடென்பது உலகம் நம்மை எப்படி மதித்தாலும், நாம் நம்மை எப்படிப் பார்க்கிறோம் என்பதைப் பொருத்துதான் அமையும்.

தன் மீது மதிப்பும் தன்னம்பிக்கையும் உள்ள ஒருவர் உலகத்தை அநாயாசமாக கவர்கிறார். அவரிடம் அறிவு, அழகு, கல்வி, செல்வம், ஆற்றல் எல்லாம் நிறைந்திருக்க வேண்டுமென எந்த நிர்பந்தமும் இல்லை. ஆனாலும் நமக்கு அவரைப் பார்த்தவுடன் பிடித்துப் போகும். ஏன்?

அவர் மீது அவருக்குள்ள பார்வை, அந்த உயர் மதிப்பீட்டின் மூலமாக அவர் செய்யும் செயலின் முழுமை, அது தரும் தன்னம்பிக்கையின் பயனாக அவரிடம் மலரும் புன்னகை. பார்ப்பவரைக் கட்டாயம் அவர் பால் ஈர்க்கும்.

எந்தத் துறையானாலும் அதில் வெற்றி பெற்றவரை காணும் போது அவரிடம் ததும்பும் தன்னம்பிக்கையே நம்மைக் கவர்ந்துவிடும். அவரைப் பற்றி நமக்கு எதுவுமே தெரியாவிடினும் நம்மை அவர் பால் ஈர்த்தது எது?

அவரைப் பற்றி அவருக்கு இருந்த நல் எண்ணம், உயர்ந்த மதிப்பு அதனால் விளைந்த தன்னம்பிக்கை. ஒரு காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் போதோ பிறருக்கு நம்மாலான உதவி செய்யும் போதோ உங்களை அறியாமலேயே உங்கள் மனம் நிறைவாக உணரத் தொடங்கும். அப்போதெல்லாம் உங்கள் முகம் மலர்ந்து, உடல் நிமிர்ந்து ஒரு நேர்மறையான சக்தி உள்ளிருந்து வெளிபடும்.

அந்த நேரத்தில் உங்கள் நடை, பாவனை, சிந்தனை அனைத்திலும் அந்தத் தன்னம்பிக்கை பிரதிபலிக்கும். அதன் பிரதிபலிப்பு மற்றவரிடமும் பரவும். அனைவரும் உங்களை அதே மதிப்போடும் மரியாதையாடும் பார்ப்பர். அனைவருக்கும் தன் மேல் உள்ள மதிப்பின் அளவீடு அவ்வப்போது மாறுபடும், நமது மனநிலை, சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறும்.

நேர்மறையான மனநிலை எப்போதும் நிலைக்க நமக்கு நம் மீதான ஆழமான நேசமும் உயர்ந்த எண்ணமும் தேவை.

### சிறிய வயதில் படித்த ஒரு கதை.

கோபரத்தின் உச்சியில் உள்ள ஒரு சிறிய சிலையில் மிக சிறிய அளவில் தவறு நேர்ந்துவிட மற்றுமொரு சிலையைச் சிற்பி வடிக்கலானார். அதைப் பார்த்த ஒருவர் அத்தனை உயரத்தில் இருக்கும் சிலையை யாரும் பார்க்கப் போவதும் இல்லை, பார்த்தாலும் இந்தச் சிறிய குறை கண்ணில் அகப்படப் போவதும் இல்லை. பின் எதற்காக இந்தச் சிரமம் எனக் கேட்டார். சிற்பி, உண்மைதான் யாருக்கும் தெரியாது. ஆனால், எனக்குத்தெரியுமே என்றாராம்.

தன் மீது உயர்ந்த மதிப்பு உடையவர்களால், எதைச் செய்தாலும் ஏனோ தானோவென்று செய்ய இயலாது. பாராட்ட யாருமே இல்லாவிடினும், ஏன் பார்க்கவே யாருமே இல்லா விட்டாலும் அவர்களின் பணி நேர்த்தி குறையாது. சாலை ஓரத்தில் பூக்கும் மலர்களைப்போல. தன் உயர்ந்த சுய மதிப்பின் காரணமாகச் செய்யும் செயலில் நேர்த்தி, அது ஈன்று தரும் சமூக மதிப்பு, அதனால் இன்னும் உயரும் சுய மதிப்பீடு என இது ஓர் அழகிய வட்டம்.

எனதருமை தோழிகளுக்கு, இதில் ஒரு சிறிய எச்சரிக்கை. உயர்வான சுயமதிப்பீடு எதைச் செய்தாலும் செம்மையாகச் செய்ய உதவும். ஆனால், எல்லாவற்றையும் செய்தாக வேண்டிய கட்டாயம் இல்லை. நம் அனைவருக்கும் வரம்புகள் உண்டு. அதை நாம் மதித்தால்தான் நம்மைச் சுற்றி உள்ளவர்கள் மதிப்பார்கள். இல்லாவிடில் நாம் அனைத்தையும் நம் தலையில் சுமந்துகொண்டிருப்போம்.

### முதலில் உங்களை பற்றிய உங்களின் எண்ணங்களை எழுதுங்கள்.

1. உங்களிடம் பிடித்த விஷயங்கள்
2. மாற்ற வேண்டிய விஷயங்கள்
3. எந்தச் சூழ்நிலையில் நீங்கள் நேர்மறையாக உணர்கிறீர்கள்?



4. எந்தச் சூழ்நிலையில் நீங்கள் எதிர்மறையாக உணர்கிறீர்கள்?
5. இந்தச் சுய அலசல் ஒரு தெளிவைத் தரும்.

உங்களிடம்உங்களுக்குப்பிடித்ததைக்கொண்டாடுங்கள்.

பிடிக்காததை மாற்றவோ மெருகேற்றவோ முடியுமெனில் அதற்கான முயற்சி செய்யுங்கள்.

மாற்ற முடியாதெனில் அப்படியே உங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். குறை இல்லாத மனிதர் இல்லை, எனில் நாம் மட்டும் விதிவிலக்கல்ல.

நீங்கள் மிகவும் நேசிக்கும் உறவோ நட்போ அவர்களிடம் ஏதும் குறை இருந்தால், அவர்களை விட்டு விலகுவதில்லை, அவர்களைத் தாழ்வாக எண்ணுவதில்லை. மாற்றாக அதைக் களையவே முயல்வோம், முடியாத பட்சத்தில் அவர்கள் அப்படித்தான், ஆனாலும் என் நேசம் குறையாதென ஏற்றுக்கொள்வோம்.

பின், எவரையும்விட அதிகமாக நேசிக்க வேண்டிய நம்மை, சில குறைகளுக்காகத் தாழ்வாக ஏன் நினைக்க வேண்டும் ?

சிலருக்கு இயல்பிலேயே தன்னைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை இருக்கும்.

இதற்கு குடும்பச் சூழல், வளர்ப்பு, சுற்றுப்புறம், உறவுச் சிக்கல்கள், சமுதாயத்தில் பணியிடத்தில் யதார்த்தமற்ற எதிர்பார்புகள், சக மனித அழுத்தம் எனப் பல காரணிகள்.

காரணிகள் ஆயிரம் இருந்தாலும் அதைக் களைவது நம் கையில். எங்கிருந்து தொடங்குவது மாற்றத்தை?

நம் உடலில் இருந்துதான். ஆரோக்கியமான உடல்தான் மன ஆரோக்கியத்திற்கு அடிப்படை.

1. உங்களால்முடிந்த உடற்பயிற்சியைத்தொடங்குங்கள். உற்சாகமான மனம் உங்கள் வசம்.

2. உங்களுக்கு முடியாது, வேண்டாம் எனச் சொல்ல தோன்றும் போது, அதைத் தைரியமாகவும் அதே நேரம் அமைதியாகவும் சொல்லப் பழகுங்கள். ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் போகப் போக உங்களின் மீதான மரியாதை உங்களுக்குக்கூடும்.

உயர்ந்த சுய மதிப்பீடுள்ள எந்தப் பெண்ணும் யாருக்காகவும்எதற்காகவும்தவறு என நினைத்ததைச் செய்வதில்லை.

அதற்கு ஈடாக எதை இழந்தாலும் சுயத்தை இழப்பதில்லை. பொள்ளாச்சி நிகழ்வை ஆராய்ந்தால், அந்தச் சிறுமிகளின் சுய மதிப்பீடு உயர்வாக இருந்திருந்தால் அவர்களை எந்த விதத்திலும் கட்டாயப்படுத்தி இருக்க முடியாது. யாரை இழந்தாலும் சுய மரியாதயைக் குறைக்கும் ஒரு செயலைச் செய்திருக்கமாட்டார்கள்.

3. உங்களிடம் நேர்மறையாகப் பேசுங்கள். நீங்கள் உங்களிடம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் உங்களின் ஆழ்மனம் கேட்கும், செயல்படுத்தும். உங்களின் குறைகளை நேர்மையான சுய சிந்தனையின் மூலம் சரிசெய்யலாம். உங்களுக்கு கணக்கோ ஆங்கிலமோ வராதென்றால் எனக்கு வராது என்று சொல்லாமல் கற்றுக்கொண்டிருக்கிறேன், விரைவில் தேர்ந்துவிடுவேன் என நினைக்க, சொல்லப் பழகுங்கள். தீவிரமாகப் பயிற்சி செய்யுங்கள்.

### உங்களின் முன்னேற்றத்தைக் கண்கூடாகப் பார்க்க முடியும்.

4. உங்கள் முன்னேற்றத்தை அவ்வப்போது அளவிடுங்கள்.

5. உங்களின் சின்னச் சின்ன வெற்றியைக் கொண்டாடுங்கள். இந்தக் கொண்டாட்டங்கள் உங்களை அறியாமலேயே சுயமதிப்பீட்டை உயர்த்தும்.

6. உங்களைச்சுற்றி உள்ளவர்களைத் தேர்ந்தெடுங்கள். உங்களின் சுய மதிப்பீட்டில் பெரும் பங்கு அவர்களுடையது.

7. உங்கள் கட்டுப்பாட்டுக்குள் உள்ளவற்றில் மட்டும் கவனம் செலுத்துங்கள். வெளிக்காரணிகள் எப்படி ஆனாலும், அதைப் புறந்தள்ளிவிட்டு, உங்களின் முன்னேற்றத்தை, மன நிலையை மட்டும் மனதில் இருத்துங்கள்.

உங்களின் அகமும் புறமும் மலர்ந்து நீங்கள் ஜொலிப்பதை ரசிக்க தயாராகுங்கள்.



# 2வது ஓட்டெடுப்பில் வெற்றி: ஜெர்மனியின் புதிய அதிபரானார் பிரெட்ரிக் மெர்ஸ்

ஜெர்மனி நாட்டு பார்லிமெண்டில் இன்று நடந்த வாக்கெடுப்பில், பிரெட்ரிக் மெர்ஸ் பெரும்பான்மையை நிரூபித்தார். ஐரோப்பாவின் பெரிய பொருளாதார நாடான ஜெர்மனியில் பிப்ரவரியில் பார்லிமென்ட் தேர்தல் நடந்தது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அதிபராக தேர்வு செய்யப்பட்டவர் பார்லிமென்டில் தன் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்.

ரகசிய வாக்கெடுப்பில் 630 வாக்குகளில் அவருக்கு 316 என்ற எண்ணிக்கையில் அவருக்கு பெரும்பான்மை தேவைப்பட்டது. முதல் சுற்றில் அவரால் 310 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது.

வெளிநாட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு 100ழூ வரி டிரம்ப் அடுத்த அதிரடி!


அதனை தொடர்ந்து பிற்பகல் நடந்த இரண்டாவது வாக்கெடுப்பில் மெர்ஸ் 325 வாக்குகளைப் பெற்றார். இதன் மூலம் அவரது அதிபர் பதவி உறுதி செய்யப்பட்டது.

2002ல் ஏஞ்சலா மெர்க்கலிடம் கட்சி அதிகாரப் போராட்டத்தில் தோற்ற பின்னர், பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தனியார் துறையில் பணியாற்றினார் மெர்ஸ். வசதிபடைத்த, கத்தோலிக்க மேற்கு ஜெர்மன் வழக்கறிஞரான அவர், பொழுதுபோக்கு விமானியும் ஆவார்.

ஜெர்மனியின் அதிபராக பதவியேற்ற பிரெட்ரிக் மெர்ஸ்க்கு, உக்ரைன் மற்றும் பிரான்ஸ் அதிபர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன் தனது வாழ்த்து செய்தியில், ஐரோப்பாவின் எதிர்காலம் ஆபத்தில் இருப்பதால் இது மிகவும் முக்கியமானது, மேலும் இது நமது ஒற்றுமையைப் பலப்படுத்தும் என்று கூறியுள்ளார். (ஐ)

# துருக்கி அதிபர் உதவியுடன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன்: அதிபர் டிரம்ப் சபதம்!



*வெளிநாட்டில் தயாரிக்கப்படும்படங்களுக்கு 100ழூ வரி டிரம்ப் அடுத்த அதிரடி!*

*துருக்கி அதிபர்ரெசெப்எர்டோகன்உதவியுடன் உக்ரைன்–ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உறுதி அளித்துள்ளார்.*

*உக்ரைன் – ரஷ்யா போரை நிறுத்த உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பிலும் தீவிர பேச்சு நடத்தினார். இந்நிலையில், துருக்கி அதிபர் ரெசெப் எர்டோகன் உதவியுடன் உக்ரைன்–ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என டிரம்ப் தெரிவித்தார்.*

*இது குறித்து அதிபர் டிரம்ப்சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ரஷ்யா–உக்ரைன் போர் உட்பட பல விஷயங்கள் குறித்து துருக்கி அதிபர் ரெசெப் எர்டோகன் உடன் தொலைபேசியில் பேசினேன். இருவரும் சிறப்பான பேச்சுவார்த்தை நடத்தினோம். எதிர்காலத்தில் துருக்கிக்கு வருமாறு ரெசெப் எர்டோகன் எனக்கு அழைப்பு விடுத்தார். நானும் அமெரிக்காவுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்தேன்.*

*நான் அதிபராக இருந்த போது, துருக்கி உடன் உறவு சிறப்பாக இருந்தது. சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாதிரியார் ஆண்ட்ரூ பிரன்சனை அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்ப அவர் உதவினார். பல விஷயங்களில் நாங்கள் நெருக்கமாக இணைந்து பணியாற்றினோம். துருக்கி அதிபர் ரெசெப் எர்டோகன் உதவியுடன் உக்ரைன்–ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வர ஆவலுடன் காத்திருக்கிறேன். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)*

# உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதல்: விமான சேவையை நிறுத்தியது ரஷ்யா




மாஸ்கோவில் உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலால், 4 முக்கிய விமான நிலையங்களில் விமான சேவையை தற்காலிகமாக ரஷ்யா நிறுத்திவிட்டது.

ரஷ்யா–உக்ரைன் இடையே போர் நடந்து வரும் நிலையில், அதை நிறுத்த உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இவ்வாறு ஒரு புறம் இருக்க இருநாடுகளும் ஒன்றுக்கொன்று தாக்கிக்கொண்டு தான் உள்ளன.

இந்நிலையில் உக்ரைன் தரப்பில் ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் ஏவப்பட்ட 100க்கும் மேற்பட்ட ட்ரோன்களை, ரஷ்ய தரப்பில் இடை மறிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

இது குறித்து ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியதாவது: இந்தத் தாக்குதலில் மாஸ்கோவைச் சுற்றியுள்ள நான்கு விமான நிலையங்களும் தற்காலிகமாக விமான சேவையை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உக்ரைனின் ட்ரோன்கள் தாக்கியதால், மற்ற ஒன்பது மண்டல ரஷ்ய விமான நிலையங்களும் தற்காலிகமாக செயல்படுவதை நிறுத்திவிட்டன. இவ்வாறு பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. கவர்னர் அலெக்சாண்டர் கின்ஷ்டீன் கூறுகையில், உக்ரைன் நடத்திய தாக்குதலில் குர்ஸ்க் பகுதியில் இரண்டு பேர் காயமடைந்தனர். மேலும் வோரோனேஜ் பகுதியில் சில சேதங்கள் பதிவாகியுள்ளன. இரண்டாம் உலகப் போரில் வெற்றி தினத்தைக் குறிக்கும் விழா மாஸ்கோவில் நடக்கிறது. இதையொட்டி அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்த 72 மணி நேர போர் நிறுத்தத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாக இந்த ட்ரோன் தாக்குதல் நடந்துள்ளது என்றார். (ஐ)

# பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இந்தியாவுக்கு முழு ஆதரவு: அமெரிக்க சபாநாயகர் அறிவிப்பு



பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுடனான பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டத்திற்கு முழு ஆதரவை அளிப்பதாக அமெரிக்க பார்லிமென்ட் சபாநாயகர் மைக் ஜான்சன் உறுதியளித்தார்.

பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா கடுமையாக்கியுள்ள நிலையில், அமெரிக்க பார்லிமென்ட் சபாநாயகர் மைக் ஜான்சன் கூறியதாவது:

இந்தியா பயங்கரவாதத்திற்கு எதிராக நிற்க வேண்டும். அந்த முயற்சிகளை ஆதரிக்க அனைத்தையும் செய்வோம்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு டிரம்ப் நிர்வாகம் இந்தியாவிற்கு முழு ஆதரவை வழங்கும்.

இந்தியாவுடனான உறவுகள் அமெரிக்காவிற்கு மிகவும் முக்கியமானவை. அதனை தொடர எங்களால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்வோம்.

இந்திய நாட்டுடனான உறவின் முக்கியத்துவத்தை டிரம்ப் நிர்வாகம் தெளிவாகப் புரிந்து கொள்கிறது. பயங்கரவாத அச்சுறுத்தலின் முக்கியத்துவத்தை தெளிவாகப் புரிந்துகொள்கிறது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல்களில் இரு பெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற இந்த அரசு, 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப் பெரிய சரிவைச் சந்தித்துள்ளது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்ற செய்தியை நாட்டு மக்கள் தேர்தலின் ஊடாக முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டது போலவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் ஜே.வி.பி. கையாண்டது. தேர்தலுக்காக மதம் கூட பயன்படுத்தப்பட்டது.

நாட்டு மக்கள் இப்போது பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். எனவே, பொய்களை முறியடித்து, உண்மையான பலம் வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற பொதுமக்களின் கருத்தின் அடிப்படையில் இந்தச் சவாலான பொறுப்புக்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது." - என்றுள்ளது.

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலநிலை நிலவி வரும் நிலையில் இன்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கள்ளியடி வயலில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அந்தக் குடும்பஸ்தரின் சடலம் புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அருமைநாயகம் யசோதரன் எனும் 42 வயது மதிக்கதக்க குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

## நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பிரசன்ன ரணவீர வீட்டை விட்டு தப்பிச் சென்று நீண்ட நாட்களாகத் தலைமறைவாக இருந்தார்.

இந்நிலையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர இன்று மஹர நீதிவான் நீதிமன்றில் சரணடைந்ததையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கெஹலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவில் முன்னிலையாகியபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், கெஹலிய ரம்புக்வெலவைக் கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற விரும்பும் தனிநபர்களின் சுயாதீனக் குழுக்களைத் தமது கட்சி பரிசீலிக்கும் என்றும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் கட்சி பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற சபைகளில் ஆட்சியை நிறுவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற ஏனைய கட்சிகள் அந்தந்தச் சபைகளில் ஆட்சியை நிறுவ வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியத்தை வடக்கு, கிழக்கில் வலிதாக்கி எமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி. மாற்றம் என்ற அநுர அலைக்குள் மக்கள் அள்ளுண்டுவிடுவர் எனப் பெரும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த சூழலில் நாம் ,ம்முறை 58 சபைகளில் போட்டியிட்டு, 40 சபைகளின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வகையில் பெருவெற்றி பெற்றுள்ளோம்.

இந்த வெற்றியானது தமிழ்த் தேசியத்தின் பால் மக்கள் கொண்டுள்ள நேசத்தைக் காட்டுகின்றது.

இந்த நேரம் பல சபைகளில் ஆட்சியமைக்கும் தரப்பாக நாம் ,ருந்தாலும் அதற்கான பெரும்பான்மைப் பலத்தை சக தமிழ்க் கட்சிகள் வழங்க வேண்டிய அல்லது ஆதரவு கோர வேண்டிய தேவையும் ,ருக்கின்றது.

காலச்சூழலின் நிலைமையை உணர்ந்து பெரும்பாலான சபைகளில் ,லங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க சக தமிழ்க் கட்சிகள் ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையும் ,ருக்கின்றது." - என்றார்.

# இது வெறும் ஆரம்பம் தான் தேர்தலை தொடர்ந்து நாமலின் அதிரடி பதிவு



*'இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்.' என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.*

*நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ச தனது டுவிட்டர் தளத்தில் கருத்தொன்றை பதிவிட்டுள்ளார்.*

*அந்த பதிவில், "கடந்த ஆறு மாதங்களில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஒன்றிணைந்து, எங்கள் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலம் உத்வேகம் பெற்றுள்ளது.*

*சிலர் பொய்யான வாக்குறுதிகளை நம்பியிருந்தாலும், மக்களை முதன்மைப்படுத்தும் நேர்மையான, கொள்கை ரீதியான அரசியலுக்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.*

*எங்களுடன் நின்ற அனைவருக்கும் நன்றி. இது வெறும் ஆரம்பம். உண்மையான தலைமையின் மீதான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் மீட்டெடுக்கவும் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம்" என பதிவிட்டுள்ளார்.*

# எதிர்கட்சிகள் கூட்டணி ஆட்சியை அமைக்க தீர்மானம்!

*நடைபெற்று முடிந்த 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், தேசிய மக்கள் சக்தி 130 உளளூராட்சி மன்றங்களில் மாத்திரமே ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது.*

*ஏனைய 209 சபைகளில் எதிர்கட்சிகளே அதிக ஆசனங்களை பெற்றுள்ளன.*

*தேசிய மக்கள் சக்தி 255 உள்ளூராட்சி மன்றங்களில் அதிக ஆசனங்களை பெற்றுள்ள போதிலும் தனித்து ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை பெற அந்தக் கட்சி தவறியுள்ளது.*

*அத்துடன் 26 சபைகளில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் சம அளவிலான ஆசனங்களையே பெற்றுள்ளன.*

*ஐக்கிய மக்கள் சக்தி 14 உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சி 40 சபைகளில் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. அதேபோன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும் சில சபைகளின் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளன.*

*தேசிய மக்கள் சக்தி அளிக்கப்பட்டு மொத்த வாக்குகளில் 43.3 சதவீத வாக்குகளை பெற்று 3841 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 21.6 சதவீத வாக்குகளுடன் 1727 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.*

*9.1 வாக்குளை பெற்றுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 726 ஆசனங்களையும், 4.6 சதவீத வாக்குளை பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி 371 ஆசனங்களையும், 3.6 சதவீத வாக்குளை பெற்றுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி 292 ஆசனங்களையும், 2.8 சதவீத வாக்குகளை பெற்றுள்ள இலங்கை தமிழரசுக் கட்சி 364 ஆசனங்களையும், 2.8 சதவீத வாக்குளை பெற்றுள்ள சர்வஜன அதிகாரம் கட்சி 224 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது.*

*எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையை பெற்றுள்ள சபைகளில் கூட்டணி ஆட்சியை அமைக்கும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்தும பண்டார இன்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*

# பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்த மாணவன் மீது தாக்குதல் கைதான மாணவர்களுக்கு நீதிமன்றின் உத்தரவு!

*ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர், பகிடிவதைக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், அதே ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்கள் குழுவால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வெலிகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது.*

*கடந்த 29 ஆம் திகதி ஹோமாகம பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றிற்குள் அத்துமீறி நுழைந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர், அங்கு தங்கியிருந்த அதே பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மற்றுமொரு மாணவனை தலைக்கவசத்தால் தலை மற்றும் முதுகு பகுதியில் மனிதாபிமானமற்ற வகையில் பலமாக தங்கியிருந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், ஹோமாகம தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை நடாத்தி குறித்த சந்தேக நபர்களைக் கைதுசெய்தனர்.*

*இந்த சம்பவம் தொடர்பில் கிரிந்திவெல, தெல்கொட, யுதகனாவ, தலபிட்டியாகம, நலங்குட்டி மற்றும் குளியாப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 07 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.*

*கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் இன்று (7) ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, பிணையில் விடுவிக்க நீதவான் ராஜிந்திர ஜெயசூரிய உத்தரவை பிறப்பித்தார்.*

*குறித்த ஒவ்வொருவரும் தலா 3 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிப்பதற்கு நீதவான் அனுமதி வழங்கினார்.*









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2025 வெளியிடப்பெற்றது.